கோட்டத்திற்கு 75 புதிய பேருந்துகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 9 பேருந்துகள் ஸ்ரீவில்லிபுத்தூர் கிளைக்கும் வழங்கப்படவிருக்கின்றன என்ற நல்ல செய்தியை அவருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக 6 ஆண்டுகளுக்கு மேல் மிகவும் வயதான நிலையில் இருக்கின்ற 9 பேருந்துகளைக் கண்டறிந்து அந்த 9 பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் வழங்கப்படுகின்றன என்பதை அவருக்குப் பதிலாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 180, திரு. துரை. கி. சரவணன், மாண்புமிகு தொழில் மற்றும் வணிகவரித் துறை அமைச்சர்.*

180—

தொழிற்பேட்டை

***9327—திரு. துரை. கி. சரவணன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் தொகுதியில் தொழிற்பேட்டை ஒன்று துவக்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிகவரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிதம்பரம் தொகுதியில் தொழிற்பேட்டை துவக்கிட அரசிடம் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரை. கி. சரவணன்.

திரு. துரை. கி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழரின் ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி என்னுடைய கேள்வியை இங்கே வைக்கிறேன். சிதம்பரம் தொகுதியில் புகழ்பெற்ற அண்ணாமலை பல்கலைக்கழகம் உள்ளது. அதன்

2002 ஏப்ரல் 19]

அருகே 10 கிலோ மீட்டர் தொலைவில் சி. மூட்லூர் கிராமத்தில் அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி உள்ளது. அந்தப் பகுதி மக்கள் படித்துப் பட்டம் பெறுவதற்குப் போதிய கல்வி நிறுவனங்கள் இருந்தும், வேலைவாய்ப்புப் பெற்றிட வெளி நகரங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. அவ்வாறு சென்று வேலை கிடைக்காத நேரத்தில் அந்தப் பகுதியிலே அவர்கள் தவறான பாதையிலே சென்று தங்களுடைய வாழ்க்கையைப் பாழ்படுத்திக் கொள்கிறார்கள். மேலும், சிதம்பரம்-காட்டுமன்னார்குடி செல்லும் சாலையில் சி. வீரசோழபுரம் என்ற கிராமத்தில் தனியார்களே முன்வந்து ஒரு தொழிற்பேட்டையைத் தொடங்கிட நிலங்கள் வாங்கி, அது தமிழ்நாடு அரசு சிட்கோ நிறுவனத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அந்தத் தொழிற்பேட்டையை சிட்கோ நிறுவனத்தின்கீழ் கொண்டுவந்து தொடங்கிட அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், சிதம்பரத்திலிருந்து சுமார் 20 கி.மீ. தூரத்தில் கடலூர்-சிதம்பரம் நெடுஞ்சாலையில் சிப்காட் தொழில் வளாகம் பகுதி 1-ல் சுமார் 519 ஏக்கர் நிலப்பரப்பிலும், பகுதி 2-ல் 154 ஏக்கர் நிலப்பரப்பிலும் அனைத்து வசதிகளுடன் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. மேலும், தொழில் வளாகத்தை விரிவுபடுத்துவதற்காக 1,266 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டி சிப்காட் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. சிதம்பரம் தொழில் முனைவோர் சங்கம் மூலம் சிதம்பரத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் வீரசோழபுரம் கிராமத்தில் 57 ஏக்கர் நிலத்தில் தனியார் தொழிற்பேட்டை ஆரம்பிக்க முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க முன்வராத காரணத்தினால் இவ்விடம் ஆரம்ப நிலையிலேயே உள்ளது. சிதம்பரம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க தொழில் முனைவோர்கள் முன் வந்தால் சிதம்பரத்தில் தொழிற்பேட்டை அமைக்க சிட்கோவால் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 181, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு தொழில் மற்றும் வணிகவரித் துறை அமைச்சர்.